# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

## <u>இந்திய வெளியுறவுச் செயலரின் இலங்கை விஜயம்</u>

இந்திய வெளியுறவுச் செயலர் ஸ்ரீ விக்ரம் மிஸ்ரி அவர்கள் 2026 ஆகஸ்ட் 5ஆம் திகதி இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். வெளியுறவுச் செயலராக அவரால் தனியாக இலங்கைக்கு மேற்கொள்ளப்பட்ட முதலாவது விஜயம் இதுவாகும். இதற்கு முன்னதாக 2025 ஏப்ரலில் இந்திய பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்களுடனும், 2026 ஏப்ரலில் மாண்புமிகு இந்திய துணை ஜனாதிபதி ஸ்ரீ சி.பி. இராதாகிருஷ்ணன் அவர்களுடனும் அவர்களது பேராளர் குழாமின் அங்கமாக அவர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

2. இந்நிலையில் தற்போது மேற்கொள்ளப்பட்ட விஜயத்தின் போது வெளியுறவுச் செயலர் அவர்கள், இலங்கை ஜனாதிபதி அதி மேதகு அனுரகுமார திசாநாயக்க, இலங்கை பிரதமர் மாண்புமிகு டாக்டர் ஹரிணி அமரசூரிய ஆகியோரையும் வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் கௌரவ விஜித ஹேரத் ஆகியோரை சந்தித்திருந்தார். தொடர்ந்து வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் செயலர் திருமதி அருணி ரணராஜ அவர்களுடன் சந்திப்பினை மேற்கொண்டிருந்த வெளியுறவுச் செயலர், எதிர்க்கட்சித் தலைவர் கௌரவ சஜித் பிரேமதாசா அவர்களையும் சந்தித்ததுடன் இலங்கை தமிழ் மற்றும் இந்திய வம்சாவளி தமிழ் சமூகங்களின் தலைவர்களுடனும் வெவ்வேறு சந்திப்புகளில் ஈடுபட்டிருந்தார்.

3. இந்த விஜயத்தின்போது நடைபெற்றிருந்த சந்திப்புகளின் போது இந்தியாவின் அயலுறவுக்கு முதலிடம் கொள்கை மற்றும் மகாசாகர் கோட்பாடு ஆகியவற்றின் கீழ் இந்தியா இலங்கை மீது கொண்டிருக்கும் அசைக்க முடியாத அர்ப்பணிப்பினை வெளியுறவுச் செயலர் அவர்கள் மீள உறுதிப்படுத்தி இருந்தார். அத்துடன் இந்தியா மற்றும் இலங்கை இடையிலான செயல்திட்டங்கள் மற்றும் இருதரப்பு ஒத்துழைப்பு விவகாரங்கள் தொடர்பாக தற்போது காணப்படும் ஒத்துழைப்பு குறித்து இருதரப்பினரும் பரந்தளவான மீளாய்வு ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

4. டித்வா சூறாவளியை தொடர்ந்து இந்தியாவால் அறிவிக்கப்பட்ட 450 மில்லியன் அமெரிக்க டொலர் மீள்நிர்மாண பொதியின் கீழ்

மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு செயல் திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பாக அவர்கள் திருப்தியை வெளிப்படுத்தியிருந்தனர். குறிப்பாக ரயில்வே செயல்திட்டங்கள் மற்றும் 100 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான கால்நடை வளர்ப்பு மற்றும் ஏனைய முன்னுரிமைக்குரிய தேவைகள் ஆகியவற்றுக்கான 250 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான இந்திய ரூபா அடிப்படையிலான இரண்டு கடனுதவி திட்டங்கள் தொடர்பான உடன்படிக்கைகள் நிறைவேற்றப்பட்டமையையும் அவர்கள் வரவேற்றிருந்தனர். இந்திய எக்சிம் வங்கி மற்றும் இலங்கையின் நிதி அமைச்சு ஆகியவற்றுக்கிடையில் நிறைவேற்றப்பட்ட இந்த உடன்படிக்கைகள் அதிமேதகு இலங்கை ஜனாதிபதி அவர்களின் முன்னிலையில் இலங்கை அரசாங்கத்தின் திறைசேரி செயலர் மற்றும் இந்திய உயர் ஸ்தானிகரால் பரிமாறப்பட்டது. அது மட்டுமல்லாமல் சேதமடைந்த வீடுகளின் மீள் நிர்மாணம் மற்றும் நிரந்தரமான பாலங்களின் நிர்மாணம் ஆகிய செயற்பாடுகள் டித்வா மீள் நிர்மாண பொதியின் கீழ் வெகு விரைவில் ஆரம்பமாகுமென இரு தரப்பினரும் இச்சந்தர்ப்பத்தில் ஏற்றுக்கொண்டிருந்தனர். இத்திட்டங்கள் 100 மில்லியன் அமெரிக்க டொலர் நன்கொடையின் கீழ் முன்னெடுக்கப்பட உள்ளன. 2026 ஜூலை 13ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றின் பிரகாரம் மாற்றிடத்தில் அமைக்கப்பட்ட தெனியாய மருத்துவமனைக்கான மருத்துவ உபகரணங்கள் விநியோகம், இலங்கையில் மருத்துவ தொகுதிகள் விநியோகம், நாடு முழுவதும் உள்ள கல்வி நிறுவனங்களுக்கான உபகரணங்கள் விநியோகம் ஆகியவற்றில் ஏற்பட்ட முன்னேற்றம் தொடர்பாகவும் இங்கு குறிப்பிடப்பட்டது. இதேவேளை இலங்கைக்கான நாடளாவிய ரீதியிலான அனர்த்த எச்சரிக்கை தொகுதி ஒன்றினை வெகு விரைவில் அமுல்படுத்துவது தொடர்பில் இரு தரப்பினரும் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றனர். மேலும் 5 மில்லியன் அமெரிக்க டொலர் நன்கொடை திட்டம் ஒன்றின் கீழ் வட பிராந்திய ரயில்வே தொகுதியின் மீளமைப்பு பணிகள் நிறைவு செய்யப்பட்டு ரயில் சேவைகள் மீள ஆரம்பிக்கப்பட்டமையை இரு தரப்பினரும் திருப்தியுடன் ஏற்றுக் கொண்டிருந்தனர்

5. மேலும் மின்சார வலையமைப்பு செயல்திட்டம், சம்பூர் சூரியக்கல மின் சக்தி செயல்திட்டம் மற்றும் திருகோணமலையை சக்தி வலயமாக அபிவிருத்தி செய்யும் செயல் திட்டம் உட்பட எரிசக்தி தொடர்பான செயல் திட்டங்களை துரிதப்படுத்துவதற்கான நடைமுறைகள் தொடர்பாக இரு தரப்பும் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தன. அது மட்டுமல்லாமல் இலங்கையின் பிரத்தியேக டிஜிட்டல் அடையாள செயல் திட்டத்தை அமுல்படுத்துவதற்கான மனுக்கோரல் நடைமுறைகளை விரைவில் நிறைவேற்றுவதற்கும் இரு தரப்பினரும் இணங்கியிருந்தனர். 61.5 மில்லியன் அமெரிக்க

டொலர் நன்கொடை அடிப்படையிலான செயல் திட்டத்தின் கீழ் காங்கேசன்துறை துறைமுகத்தை நவீன மயப்படுத்துதல் மற்றும் மீள்நிர்மாணம் தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கையை விரைவில் நிறைவேற்றுவது தொடர்பான பேச்சுக்கள் விரைவில் நடைபெறும் என இரு தரப்பும் குறிப்பிட்டிருந்தனர். 2025 ஏப்ரலில் இந்திய பிரதமர் அவர்கள் இலங்கைக்கு மேற்கொண்டிருந்த விஜயத்தின் போது மேற்கொள்ளப்பட்ட அறிவிப்புகளின் அடிப்படையில் 1990 சுவ செரிய அம்புலன்ஸ் சேவையை விஸ்தரிக்கும் நோக்குடனான புரிந்துணர்வு உடன்படிக்கை வெகுவிரைவில் பூர்த்தி செய்யப்படுமென இரு தரப்பினரும் இணங்கியிருந்தனர். மேலும் கடந்த வருடம் பிரதமர் அவர்கள் மேற்கொண்டிருந்த விஜயத்தின் போது மேற்கொள்ளப்பட்ட அறிவிப்பின் அடிப்படையில் ஆளுமை விருத்தி செயல் திட்டங்கள் வெற்றிகரமாக அமல்படுத்தப்பட்டு வருவதனை இரு தரப்பினரும் திருப்தியுடன் தெரிவித்திருந்த அதேவேளை, முதலாண்டில் பல்வேறு துறைகளையும் சேர்ந்த இலங்கையைச் சேர்ந்த ஆயிரம் அதிகாரிகள் இவ்வாறான செயற்திட்டங்களில் உள்வாங்கப்பட்டிருந்தனர்.

6. பெருந்தொட்ட சமூகத்துக்காக அமுல்படுத்தப்பட்டிருக்கும் நான்காம் கட்ட இந்திய வீடமைப்பு திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பாக குறிப்பிட்டிருந்த வெளியுறவுச் செயலர், 2017 ஆம் ஆண்டில் இந்திய பிரதமர் அவர்கள் இலங்கைக்கு மேற்கொண்டிருந்த விஜயத்தின் போது இந்திய வம்சாவளி தமிழ் மக்களுக்காக அறிவித்த பத்தாயிரம் வீட்டுத் திட்டத்தில் சகல வீடுகளையும் நிர்மாணிப்பதற்கான பணிகளை அமுல்படுத்துதல் உட்பட இந்திய வம்சாவளி தமிழ் சமூகத்துக்கான பல்வேறு செயல் திட்டங்களையும் துரிதமாக நடைமுறைப்படுத்துமாறு இலங்கை தரப்பினரிடம் கோரியிருந்தார்.

7. பொருளாதார விவகாரங்கள் தொடர்பான நமது பங்குடமையை வலுப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல்களும் இடம்பெற்றிருந்தன. இந்தியா இலங்கை இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையினை மேம்படுத்தல் தொடர்பான பேச்சுக்களை முன்னகர்த்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் மற்றும் இவ்வருடம் ஜூனில் இடம்பெற்றிருந்த ஆரம்பக் கலந்துரையாடல்களை இரு தரப்பினரும் வரவேற்றிருந்தனர். அதேபோல இந்திய இலங்கை சமூக பாதுகாப்பு உடன்படிக்கை தொடர்பான பேச்சுகள் வெற்றிகரமாக நிறைவடைந்திருந்தமையையும் அவர்கள் வரவேற்றிருந்தனர். இருதரப்பிலும் மேற்கொள்ளப்படும் அவசியமான உள்ளக நடைமுறைகள் நிறைவடையும் நிலையில் வெகு விரைவில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

8. இந்த விஜயத்தின் போது மீனவர்களின் விவகாரங்கள் தொடர்பாகவும் வெளியுறவுச் செயலாளரால் கலந்துரையாடப்பட்டது. இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் படகுகளையும் மீனவர்களையும் விரைவில் விடுதலை செய்வதற்காக இலங்கையின் ஒத்துழைப்பை அவர் கோரியிருந்தார். பல்வேறு விடயங்களிலும் தீர்வுகளை பெற்றுக் கொள்வதற்கு இருதரப்பு பொறிமுறைகள் தொடர்ச்சியாக செயற்பட்டு வரும் நிலையிலும் மீனவர்களின் வாழ்வாதார தேவைகளை கவனத்தில் கொண்டு ஒரு மனிதாபிமான அணுகுமுறை நமது செயற்பாடுகளுக்கு வழிகாட்டுவதாக அமைய வேண்டும் என அவர் இச்சந்தர்ப்பத்தில் கூறியிருந்தார். தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்காக இலங்கை அரசியலமைப்பின் சரத்துகளை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் எனவும் மாகாண சபை தேர்தல்களை விரைவில் நடத்துவதற்கான தமது உறுதிமொழியினை இலங்கை தலைமைத்துவம் அமுல்படுத்த வேண்டும் என்றும் வெளியுறவுச் செயலர் அழைப்பு விடுத்திருந்தார். இந்தியாவின் பாதுகாப்புக்கு தீங்கு விளைவிக்கும் எந்த வழியிலும் இலங்கையின் எல்லைகளை பயன்படுத்த இடமளிக்கப் போவதில்லை என 2024 டிசம்பர் வெளியிடப்பட்ட கூட்டு அறிக்கையில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அவர்கள் வழங்கிய உத்தரவாதம் அவரால் வரவேற்கப்பட்டது. அத்துடன் இது நமது மக்களின் பாதுகாப்பு மற்றும் செழுமை ஆகியவற்றுக்காக அவர்களது அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கு இந்தியா மற்றும் இலங்கை இடையிலான பரஸ்பர நலன்கள் அடிப்படையிலான ஒரு பரந்த அபிவிருத்தி பங்குடைமையை கட்டி எழுப்புவதற்கான வலுவான அடித்தளத்தை வழங்குகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

9. 2024 டிசம்பரில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அவர்களின் விஜயத்தின் போது வெளியிடப்பட்ட கூட்டு அறிக்கையில் கூறப்பட்டமைக்கு அமைவாகவும் 2025 ஏப்ரலில் பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் மேற்கொண்ட விஜயத்தின் போது கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரமும் நமது தலைவர்களது நோக்குகளை அமல்படுத்துவதற்கான இந்தியாவின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பினை வெளியுறவுச் செயலாளரின் இந்த விஜயம் மீள உறுதிப்படுத்துகின்றது

*****

**கொழும்பு**
**05 ஆகஸ்ட் 2026**

***ஆதாரம்:***
https://www.mea.gov.in/press-releases?dtl/41617/Visit_of_Foreign_Secretary_of_India_to_Sri_Lanka